Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 19-10-1946 ஐப்பசி 3உ { மலர் 2

# கும்பகோணத்தில் பெரியார் சொற்பொழிவு

(சென்றவாரத் தொடர்ச்சி)

காங்கரசாரை நான் கேட்கிறேன்! அன்னியனாகிய வெள்ளையனுக்கு நாம் அடிமையாய் இருக்கவேண்டுமென்றா அல்லது அவன் போகவேண்டாமென்றா நான் சொல்லுகின்றேன்? தேர்தலுக்குக்கூட நாங்கள் நிற்கவில்லையே! எங்களுக்கு வேண்டியதெல்லாம் நமக்கு இருக்கும் சூத்திரப்பட்டம் ஒழியவேண்டும் நமது நாட்டை வேறு எந்த நாட்டானும், ஆரியனும் சுரண்டக்கூடாது நாடிமுத்துவோ, வடபாதி மங்கலம் மைனரோ, ராமராஜரோ மற்றும் எந்தத் திராவிடரோ சூத்திரராக இருக்கக்கூடாது என்பதுதான் எங்கள் கவலை. காங்கரசிலுள்ள திராவிடத் தோழர்களே, ஏன் எங்களுக்கு இடையூறு செய்கின்றீர்கள்? வெள்ளையன் எங்களுக்கு வேண்டாம் அவன் எதற்கும் எங்களுக்குத் தேவையில்லை. நாட்டை ஆண்டுவந்த நாங்கள், வெள்ளையன் வந்தபிறகு, பியூனாக, பட்லராக, கான்ஸ்டேபிலாக இருக்கின்றோம். ஆனால் பிச்சை எடுத்தக் கூட்டத்தார், இன்று ஹைகோர்ட் ஜட்ஜாக, அட்வகேட் ஜனரலாக, திவானாக, மந்திரியாக, சங்கராச்சாரியாக, பகவான்களாக இருக்கின்றனர்.

பார்ப்பனர்கள் ஜட்ஜ் முதலிய பெரிய பதவிகளில் இருக்கின்றார்கள். அதனால் அவர்களுக்கு வெள்ளையன் இருப்பதால் நஷ்டமொன்றுமில்லை. எங்களுக்குத்தான் முதலில் வெள்ளையன் வெளியே போகவேண்டுமென்ற கவலை. ஏனெனில் வெள்ளையனுக்கும் ஆரியனுக்கும் நாங்கள் தான் அடிமைகளாக இருக்கின்றோம். காங்கரஸ் தோழர்களே! எங்களைச் சந்தேகிக்க வேண்டாம். வெள்ளையன் வெளியேறினால், பார்ப்பானுடைய உயர்வுக்கும், நமது தாழ்மைக்கும் அறிகுறியாகிய உச்சிக்குடுமி பூணூல் ஆகியவைகளைக் காங்கரசிலுள்ள திராவிடத் தோழர்களாகிய நீங்கள் தான் கத்தரிக்கப் போகின்றீர்களென்பது ஆரியனுக்கும் தெரியும். ஏன்! அது பாடுபடாத கூட்டம்: கடுகளவாவது நாங்கள் உங்கள் விரோதிகளல்ல' அஞ்சுகுண்டு காலத்தில், இந்த அதிசய காலத்தில் நீங்கள் இதை உணராவில்லையென்றால் பின்பு எப்பொழுது நீங்கள் உணரப் போகின்றீர்கள். எச்சல் காப்பிக் கடைகளில் திராவிடன் நுழையக் கூடாது என்று இக்காலத்திலா சொல்லுவது? நாம் பாடுபடுகின்றோம். மண்வெட்டி எடுத்து பூமியைத் திருத்தி உழுது, பயிரிட்டு பாழ் படுகிறோம். அப்படியிருக்க ஏன் நமக்கு இந்த இழிவு? யாரை நாம் வஞ்சித்தோம்? இந்த மானமற்றத் தன்மை போவதற்காக நாம் பாடுபட்டால், நாம் துரோகிகளா?

அகிம்சையே தங்கள் அடிப்படைக் கொள்கை என்று பெருமை பேசிய காங்கரஸ் பதவி ஏற்புக்குப்பிறகு எங்கள் மாநாட்டுப் பந்தல்கள் நெருப்புக்கிரையாக்கப்பட்டன. கண் போனது, கால் வெட்டப்பட்டது. அகிம்சா மூர்த்திகளாகிய காங்கரஸ்காரர்களே! இந்தக்கொடுமைகளை நீங்கள் செய்யலாமா? இது நேர்மையா? சிந்தித்துப் பார்த்து நீங்களே தீர்ப்பளியுங்கள். காங்கரஸ்காரர்களைவிட நாங்கள் பின்வாங்கியவர்களா? நாங்களும் அப்படியே செய்தால் நாடு என்ன கதியாகும்? திராவிடர்களுக்குத்தானே கஷ்டம் ஏற்படும். கம்யூனிஸ்ட் தோழர்களே! எங்களிடத்தில் உங்களுக்கு ஏன் சந்தேகம்? கம்யூனிஸ்ட், காங்கரஸ்காரர்களால் எங்களுக்கு எவ்வளவு தொந்திரவு, வெள்ளையன் வாழவேண்டுமென்றா நாங்கள் சொல்லுகின்றோம்? சுயராஜ்யம் வந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்ளும் காங்கரசார் சுயராஜ்ய காலத்தில் இப்படிச் செய்தால் இதை மக்கள் எப்படி சகிப்பார்கள்? காந்தியார்கூட சொல்லிவிட்டாரே "வெள்ளையன் மேல் சந்தேகம் வேண்டாம், அவன் நல்லவனாகி விட்டான்" என்று. இது தானா சுயராஜ்யம்?

கம்யூனிஸ்ட் கட்சியார், மில்லிலும், எஞ்சினிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களையே தொழிலாளர்களாகக் கருதுகின்றார்கள். சரீரத்தினால் பாடுபடும், சூத்திரப்பட்டம் தாங்கிய நாலுகோடி மக்களும், தொழிலாளர்களல்லவா? சூத்திரனை, கூலி இல்லாமல் பார்ப்பனன் வேலை வாங்கலாம் என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகின்றதே. இது கடவுளின் கட்டளையாம். திராவிடச் சங்கம் என்றால் சூத்திரன் சங்கம் என்றுதானே கருத்து. இதற்குத்தானே, இப்படிச் சொல்ல வெட்கப்பட்டுத்தானே பார்ப்பனரல்லாதார் சங்கம் என்றும் சொன்னோம்; ஏன் இந்த இழிவான பெயர்கள் நமக்கு? பார்ப்பனன் வேண்டுமென்றால் தங்கள் சங்கத்தை

சூத்திரனல்லாதான் சங்கம் என பெயர் வைத்துக்கொள்ளட்டுமே நாம் ஏன் நம்மை பார்ப்பனரல்லாதான் என்று அழைத்துக்கொள்ள வேண்டும் நமக்குச் சொந்தப் பெயரில்லையா? நாம் திராவிடர்கள் அல்லவா? பிராமணன் உயர்வானவனென்று எக்ஞவல்யர், நாரதர், பராசர் சொன்னது இன்று இந்த சட்டமாகக் காட்சியளிக்கின்றதே. சட்டத்திலே, சாஸ்திரத்திலே, நடத்தையிலே, பிறவியிலே நாம் சூத்திரராயிற்றே. "கடவுளாலே கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படும் இந்த சூத்திரப் பட்டத்தைத் தாங்கி நிற்பவர்கள் கஷ்டப்பட்டு வேலைசெய்யும் தொழிலாளர்களாகிய திராவிடர்களல்லவா? நாம் எப்பொழுது இந்தச் சூத்திரப்பட்டத்தை ஒழிப்பது? கம்யூனிஸ்ட் தோழர்களே! சூதுகள், தந்திரங்கள் ஒழியவேண்டும் நயவஞ்சகமாக இவ்வளவுநாள் நடந்த இந்த ஆட்சி பிரிட்டிஷ் ஆட்சியா? இது பிரிட்டிஷ் நாட்டு ஆட்சி அல்ல இந்த பேதங்கள் அங்கேயில்லை. பார்ப்பனர் நூற்றுக்கு நூறு படிக்க வசதி செய்துகொடுத்தது இந்த ஆட்சி. சூத்திரன் படித்தால் ராஜ வுர்க்குக் கேடு, பட்டத்துக்குக்கேடு என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்லுவதுபடி நடந்தது இந்த ஆட்சி. பிராமணன் உடலால் உழைக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவனுக்கு ஜட்ஜு முதலிய உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வெள்ளையன் பார்ப்பானுக்கு உடந்தையாக இருக்கின்றான். இது வெள்ளை ஆரியனுக்கும், மஞ்சள் ஆரியனுக்கும் உள்ள ஒப்பந்தம்தான். இனி ஏற்படப் போவதுகூட அந்த ஒப்பந்தம்தான். மற்றப் பேச்சுகளெல்லாம் தந்திரம் இதை இரண்டுவருடத்துக்கு முன்பே நான் சொல்லிவிட்டேன். அம்பேதகாரும், ஜின்னாவும் இப்பொழுது சொல்லுகிறார்கள். இன்றைய சமுதாய அமைப்பைக் காப்பாற்றுவதுதான் சுயராஜ்யம். இதற்கு ஒரு உதாரணம்: திருவையாற்றிலே, சாப்பாட்டில் பேதம் கூடாது என்று சொன்ன காலத்திலே, மகாகனம் சாஸ்திரியார், பி. எஸ். சிவசாமிஐயர், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார் முதலியோர் "நாம் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறுகின்றாயே" என வெள்ளையனைக் கேட்டார்கள். இதைத்தான் நாம் உடைக்கவேண்டும்.

வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போய்விடுகிறேன் என்று சொல்லுவது, மற்ற வல்லரசுகளிடம் அவன் செய்துகொண்ட ஒப்பந்தம் சண்டை நீங்கினவுடன் அவரவர்கள் நாட்டை அவரவர்களிடம் விட்டுவிடவேண்டும் என்று நிபந்தனை செய்துகொண்டார்கள். அந்தப்படி அமெரிக்கன், பிலிப்பைன் நாட்டை விட்டுவிட்டான். அதைப்போலவே பிரஞ்சுக்காரனும் விட்டுவிட்டான். ஆனால் நமது நாட்டை நம்மிடம் விடாமல் வெள்ளையன் தந்திரம் செய்கின்றான். காங்கரஸ் அவனை வெளியே விடாமல் தடுத்து நிற்கின்றது. காங்கரஸ் ஏன் அவனிடம் பேரம் பேசுகின்றது? நாட்டை ஆள நமக்குத் தகுதி இல்லையா? நாட்டின் ஆட்சிக்கு முட்டுக்கட்டையாக, ஒற்றுமைக்கு விரோதமாக, எவன் ஜாதிப் பட்டம் வைத்திருக்கின்றானோ, எவன் பெயருக்குப் பின்னால் ஜாதியைக் குறிப்பிடும் வால் வைத்திருக்கின்றானோ, அவனுக்கு 6-மாத தண்டனை விதிக்கட்டுமே.

பெருவாரியான ஜாதிமத பாகுபாடுள்ள நாட்டிலே, ஒரே கொள்கையையுடைய ஒரு இனம், அதுவும் நூற்றுக்கு, 60க்கு மேல் மெஜாரட்டியாகவுள்ள இடத்தைத் தங்களுக்கென முஸ்லிம்கள் தனியே பிரித்துக்கொள்ளுகிறதென்றால், இதில் என்ன தவறு? இது என்ன முட்டுக்கட்டை? நாடு என்ன பிளந்துபோகும், நாடு என்ன வெடித்துப்போகும். இதற்கு எதிர்ப்பு இருக்கின்றது என்றால் இது வெள்ளையனும், ஆரியனும் உண்டாக்குகிறகலகம். இங்கு இருக்கின்ற பிணக்கு, ஆபாசம் வெள்ளையனுக்குத் தெரியாதா? பார்ப்பான் என்று ஒரு ஜாதியும் பறையன் என்று ஒரு ஜாதியும் இருப்பதும், ஹோட்டலுக்குள் ஒரு ஜாதிக்காரன் போகக்கூடாது என்பதையும் பார்த்து வெள்ளைக்காரன் சிரிக்கமாட்டானா?

கல்கத்தாவில் நேற்று நடந்த கலவரத்தைப் பாருங்கள். இதுதானா அஹிம்சையின் முறை? கலகத்துக்கு ஏன் இடம்? முஸ்லிம்களுக்கு முஸ்லிம் லீக்கும், ஜாதி இந்துக்களுக்குக் காங்கரசும் என்னும் முடிவை ஒப்புக்கொண்டதை ஏன் வெளியிட்டாய் என்று வேவல் ஜின்னாவைக் கேட்டாரே, இதுபெரிய பார்லிமெண்டரி ராஜதந்திரபேச்சா? இதுதான் சமாதானத்துக்கான பேச்சா? இடைக்கால சர்க்காரில் காங்கரஸ் சேராவிட்டால் நீயே நடத்து என்று ஜின்னாவிடம் வேவல் சொன்னாரே அதன்படி காங்கரஸ் முறுக்கிக்கொண்டிருக்கும்போது ஜின்னாவுக்கு ஏன் வேவல்துரை அந்த சலுகையைக் காட்டவில்லை? இதை ஜின்னா ஏன் வெளிப்படையாகச் சொல்லக்கூடாது? தாங்களும் போராட்டத்துக்குத் தயார் என்று சொல்லுவதில் என்ன தப்பு? ஆகஸ்டு கலவரத்தில் அவர்கள் குறுக்கிட்டார்களா? வெள்ளையனிடத்தில் தானே லீகுக்குச் சண்டை? இதில் காங்கரஸ் ஏன் குறுக்கிடவேண்டும்? சொற்ப பார்ப்பனரை நம்மால் விரட்ட முடியாமலிருக்கும்போது பத்துகோடி முஸ்லிம்களை நம்மால் எப்படி விரட்ட முடியும்? நமக்கும், முஸ்லிம்களுக்கும் என்ன வேற்றுமை? இருவரும் ஜாதி இல்லை என்று சொல்லுகின்றோம். அவர்கள் சமுதாய நலத்தில் நாம் பிரவேசிக்க வேண்டாம், நமது நலத்தில் அவர்கள் பிரவேசிக்க வேண்டாம். முஸ்லிமால் நமக்கு என்ன கேடு? இத்தேசத்திலேயுள்ள சமூகத்திலே முஸ்லிம்கள் மெஜாரட்டியாக பத்துகோடி பேர்கள் இருக்கின்றார்கள். மற்றவர்களில் எது கட்டுப்பாடு? எவ்வளவோ வேற்றுமை. மற்றையோர் அவர்களைப் பார்த்துக் கட்டுப்பாடு கற்றுக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம் லீக், ஷெட்யூல்டு பெடரேஷன், திராவிடர்கழகம், வெள்ளையனால் ஏற்பட்டதல்ல. ஆனால் காங்கரசை உண்டாக்கியவன் வெள்ளையன். வெள்ளையன் இந்நாட்டுக்கு வந்தவுடன் அவனுக்குத் தொந்திரவு கொடுத்தவர்கள், திராவிடர்களும், முஸ்லிம்களும். அவனுக்கு மதிப்பு கொடுக்காமல், அவனை நேரிடையாக பெயரிட்டு அழைப்பார்கள்.

அறுபது ஆண்டுகளுக்கு முன் காங்கரசை உண்டாக்கியவர்கள் வெள்ளையர்கள். ஹியூம் என்னும் வெள்ளையன்தான் அதற்குக் காரியு

# அர்ச்சுனன் நினைவு நாள்

27-10-46ல் ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு முழுவதும் அர்ச்சுனன் மறைவு குறித்த அனுதாப நாளாகக் கொண்டு திராவிடக் கழகத்தார் யாவரும் பொதுக்கூட்டங்கள் கூட்டி, தீர்மானங்கள் நிறைவேற்றி, அவர் குடும்பத்துக்கும், பத்திரிகைகளுக்கும் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறது.

ஆ. திராவிடமணி,
செயலாளர், திராவிடர்கழகம்.

---

தரிசியாய் 10 வருடங்கள் இருந்தான். வெட்டர்பர்ன் என்னும் வெள்ளைத் துரையும் அதில் முக்கிய உறுப்பினர்.

28-4-46 பாரததேவிப் பத்திரிகையைப் பாருங்கள். விஜயராகவாச்சாரியைக் கொண்டாடிய மலர் அது. மோதிலால் நேரு, விஜயராகவாச்சாரியார் சண்டை! விஜயராகவாச்சாரியார் காங்கரஸ்காரரல்ல. ஆனால் இந்துமகாசபைக்காரர். காக்கினாடா காங்கரசில் ஏற்பட்டது அந்த சண்டை. சட்டசபைக்கு நிற்கக்கூடாது என்று ஆச்சாரியார் சொன்னார். நிற்கவேண்டுமென்று மோதிலால் சொன்னார். சண்டை வந்தது. கோர்ட்டை நான் பகிஷ்கரித்தகாலத்தில் ஆச்சாரியார் கோர்ட்டுக்குப் போய் பணம் சம்பாதித்துக் கொண்டு இருந்துவிட்டு இப்போது எனக்கு ஞானோபதேசம் செய்கிறார்" என்று நேரு சொன்னார். "நான் கோர்ட்டில் வழக்கு நடத்தி சம்பாதித்ததை, மோதிலால் நேரு தலைவராக இருந்துகொண்டு என்னைப் பரிகசிக்கிறார்; நான் வக்கீல் தொழிலில் சம்பாதித்த பணத்தில் ஒரு பாகம் காங்கரசின் பெற்றோர், மூதாதையோர்களான ஹியூம், வெட்டர்பர்ன் ஆகிய வெள்ளைக்காரர்களுக்கு காங்கரஸ் வேலைக்காக பணம்கொடுத்து அவர்கள் மூலம் வளர்த்த காங்கரசில் இருந்து அவர் பேசுவதை அவர் உணரவில்லை போலும்" என்று விஜயராகவாச்சாரியார் இடித்துரைத்தார்.

ஆகவே எது வெள்ளையரால் உண்டாக்கப்பட்டு வளர்த்த ஸ்தாபனம்? காங்கரசா அல்லது திராவிடர் கழகம், அம்பேத்கார் கட்சி, முஸ்லிம் லீக் ஆகியவைகளா? யோசித்துப் பாருங்கள்.

திராவிடர்கழகத்திலே, தோழர் சின்னத்தம்பி தனது ஹானரரி மாஜிஸ்ட்ரேட் வேலையை விட்டுவிட்டார். இதைப்போல எத்தனையோ பேர்கள் தப் பட்டங்களையும் பதவிகளையும் விட்டு விட்டார்கள். முஸ்லிம் லீகிலும் இதைப்போல நவாப்புகளும் ராஜாக்களும், தங்கள் பட்டம் பதவிகளை வீசி எறிந்திருக்கிறார்கள். ஷெடியூல் வகுப்பிலும் சிவராஜ் விட்டுவிட்டார். ஆகவே நாங்களா மூட்டுக்கட்டை? நாங்களும் வெள்ளையனும் ரத்தக்கலப்பா? எங்கள் சுதந்திரத்தை அவன் பறித்துக்கொள்ளவில்லையா? காங்கரஸ் தோழர்களே! எங்களை ஏகாதிபத்தியக் கூலிகள் என்று சொல்ல வேண்டாம். எங்களுக்கு வேண்டுவது திராவிட ஏகாதிபத்தியம். இந்நாட்டிலேயுள்ள ஆரிய ஏகாதிபத்தியம், வெள்ளையன் ஏகாதிபத்தியம் போய்விட்டால் ஆயிரம் வேலி மிராஸ்தாரன் ஒழிவான். பணமூட்டைகளும், மடாதிபதிகளும் மண்ணைக் கௌவுவார்கள். கல்லுச்சாமி கடவுள்களுக்குப் பலகோடி ரூபாய் வருமானம் இருக்காது. அவை மக்கள் யாவருக்கும் சரிசமனாக பயன்படும்.

தொழிலாளிகளுக்கு எங்கள் கொள்கை தெரியுமா? கூலிகொடுப்பது, கூலி உயர்வது, போனஸ் பெறுவது அல்ல எங்கள் கொள்கை. ஆனால் தொழிலாளிகள் முதலாளிகளிடத்தில் பங்குபெறவேண்டும். ரயில்வே தொழிலாளர்களென்றால் அவர்கள் அதன் முதலாளிகளிடத்தில் பங்கு பெற வேண்டும். மிஷினுடைய தேவைக்கு எப்படி கரியும் எண்ணெயும் உபயோகப்படுத்தப் படுகின்றதோ அதைப்போல தொழிலாளியின் உழைப்புக்குத் தகுந்தபடி செலவுக்குக் கொடுக்கப்பட வேண்டும். கரியும், எண்ணெயும் எப்படி மிஷினுக்கு இன்றியமையாததோ அதைப்போல தொழிலாளிக்குக்கூலியும் இன்றியமையாதது. முதலாளி, கணவனும் தொழிலாளி மனைவியுமாவார்கள். இவர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைதான் லாபம். ஆகவே லாபம் என்பது இருவருக்கும்பொது. இதைப்போலவே, நிலத்திலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒருபடி இரண்டுபடி கூலி அதிகம் கிடைப்பதால் நாங்கள் மகிழ்ச்சியடைந்துவிடமாட்டோம். வேலைக்குத் தகுந்த கூலி கிடைப்பதுடன், விளைவிலேயும், தொழிலாளர்களுக்கு மில்லில் பூமியில் பங்குவேண்டும். எங்கள் திட்டம் நிறைவேறினால் யந்திரச்சாலை தொழிலாளர்களுக்கு வந்துவிடும். இதுதான் நியாயமான நீதியான ஆட்சிமுறை. இதில் யாரும் எந்தப் பஞ்சாயத்துச்செய்யத் தேவையில்லை. நாங்கள் பதவியேற்று

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

---

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

21-10-46 சென்னை
25— சிதம்பரம்
26— நாகப்பட்டணம்
27— லால்குடி
28— மணச்சநல்லூர்

---

## நன்றி நவிலல்

திராவிட நாட்டின் பல பகுதிகளிலும், மலேயா சிங்கப்பூர் முதலிய பகுதிகளிலும், மற்றும்பல விடங்களிலும் எனது 69-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடிய எல்லா தோழர்களுக்கும், வாழ்த்துச் செய்தி யனுப்பிய தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈ. வெ. ரா.

# குடி அரசு

1946-ஞு அக்டோபர் 19௳

## என். அர்ச்சுனன் மறைந்தார்

தோழர் அர்ச்சுனன் மறைந்தார் என்ற செய்தியைக் கேட்ட ஒவ்வொரு திராவிடரும் கண்ணீர் விடாமலிருக்க முடியாது காரணம் அர்ச்சுனன் திராவிடர் கழகத்தின் ஒப்பற்ற தூணாய் விளங்கியதுதான்.

அர்ச்சுனன் தனது 23-வது வயதில் இயற்கை யெய்தினார். அவர் மறைந்த அடுத்த நாளில் தான் அவரது 23ம் ஆண்டும் மறைந்தது. அவர் திராவிடர் கழகத்தில் சுமார் 3-ஆண்டுகளாகத்தான் தீவிரமாகப் பங்கு கொண்டிருந்தார். 3-ஆண்டுகளாகத்தான் திராவிடர் கழகத்தில் பங்கு கொண்டார் என்றாலும் அவர் தனது 20ம் ஆண்டிற்கு முன்பே திராவிடத் தொண்டராகிவிட்டார் என்று கூறலாம். அம்மூன்று ஆண்டுகளில் அவர் திராவிட மக்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் வீட்டுப்பேச்சில் கலந்து பேசும்படியான அளவுக்கு வியாபகம் பெற்றுவிட்டார். திராவிடச் செல்வர்களுக்கு வெட்கமும், சங்கடமும், பொறாமையும் ஏற்படும்படியான அளவுக்கு அவ்வியாபகம் உச்சம் பெற்றிருந்ததென்றே சொல்லலாம். ஏனெனில் அர்ச்சுனன் ஒரு இலட்சம் ஏகர் நிலமுடையவர் மாத்திரமென்பதல்லாமல் பல ஆயிரக்கணக்கணக்கான [illegible]களை கொண்டவர் என்பது மாத்திரமல்லாமல் பல்லாயிரக்கணக்கான மக்களைத் தனது பண்ணை ஆட்களாகக் கொண்டிருந்தார் என்பது மாத்திரமல்லாமல் கொங்குநாட்டுவேளாள சமுதாயத்திற்கு 'சாமிங்களே' 'எஜமாங்களே' என்று அழைக்கும்படியான சமுதாயத் தலைமைஸ்தான முடிசூட்டப் பெற்ற மன்னராயும் விளங்கினார். இப்படிப்பட்ட ஒரு இளவல், மாணிக்கம் தனது தலைமையைத்துறந்து சாதாரணத் தன்மையில் இருந்துகொண்டு பாமரமக்கள் இடையில் கலந்து தொண்டாற்றுவதையும், அதனால் அவர் பொதுமக்களால் பாராட்டிப் புகழப் படுவதையும் காணும் பெரும் பெரும் பண்ணைகளும் ஜமீன், மிட்டாக்களும் தங்கள் தன்மைக்கு மதிப்பில்லாமல் போவதால் சங்கடப்பட வேண்டியதும், மக்கள் இலட்சியம் செய்யாததால் வெட்கப்பட வேண்டியதும் தம்மிலும் உயர் புகழ் அவருக்கு ஏற்பட்டுவிட்டதால் பொறாமைப்பட வேண்டியதுமாக ஆகிவிட்டார்கள் என்று குறிப்பிட்டோம்.

மக்களில் எவ்வளவு ஞானம் பெற்றவர்களும் தங்கள் செல்வத்தையும் மனைவிமக்களையும் துறந்துவிடலாம். ஆனால் ஒருவன் தனது அந்தஸ்து என்னும் தலைமையைத் துறப்பது என்பது உண்மையான தொண்டனுக்குத்தான் முடியும். ஏனெனில் துறவிகள் எதைத் துறந்தாலும் தாங்கள் முற்றுந்துறந்த துறவிகள் என்கின்ற அந்தஸ்தை துறக்கமாட்டார்கள். அதற்குத் தகுந்த பயனை எதிர்நோக்கியே அனுபவித்தே நிற்பார்கள். உண்மைத் தொண்டர்களுக்கு அந்தஸ்தும் இருக்காது; பயன் எதிர்பார்ப்பதும் இருக்காது. தொண்டு செய்வதையே தொண்டாகவும் அத்தொண்டில் ஏற்படும் [illegible]சாகத்தையே பயனாகவும் கருதிக்கொண்டு இருப்பவர்களாவார்கள். ஆதலால் அர்ச்சுனன் தனது தலைமையையும் மறந்து தொண்டர் தன்மையையே சதா கருத்தில் வைத்து, மனமொழி மெய்களால் உண்மைத் தொண்டாற்றி வந்த சேகவனாகவே இருந்தார். இது திராவிட கழகத்தில், திராவிட மக்கள் நலத்துக்கு ஆற்றும் தொண்டில் அவர் இருந்த நிலை என்றால் மற்றப்படி அவர் தனது பண்ணையில் பாட்டாளி மக்களிடத்திலும் மிக அன்பாய் நடந்துகொள்வார். பாட்டாளி மக்களும் மக்கள்தான் என்ற எண்ணம் எப்போழ்தும் அவருள்ளத்தில் தாண்டவமாடும். வேலையாட்கள் வேண்டியவற்றைச் சற்றும் தயக்கமில்லாது வழங்கிவந்தார். பழய கோட்டைப் பண்ணை மக்கள் அத்தனைபேரும் இளைய பட்டக்காரர் அர்ச்சுனனைக் காணும்போதெல்லாம் உள்ளம் பூரிப்பு எய்துவர். அவர்களை அர்ச்சுனன் ஒருநாளும் அதட்டிப் பேசியறியார். அன்பைக் காட்டியே வேலையாட்களைத் திருத்துவார். அர்ச்சுனன் அவர்கள் மறைந்த நாளன்று அந்த வேலையாட்கள் பட்ட அல்லல் சொல்லுதற்கியலாது.

நாளடைவில் அர்ச்சுனன் வைதிகக் கோட்பாடுகளைத் தன் இல்லத்திலேயே குறைத்து வந்தார். ஒரு திங்களுக்கு முன்னால் தன் தந்தையாரின் நினைவு நாள் கொண்டாட்டத்தில் பார்ப்பனச் சடங்கை அறவே ஒழித்தார் என்ற செய்தியை வாசகர்கள் உணர்ந்திருக்கலாம். 40 ஆயிரம் ரூபாய் செலவில் நடக்கவேண்டிய சடங்கை 400-ரூபாயில் முடித்தார் எனலாம். வைதீகத்தின் பிறப்பிடமாகவிருந்த பழய கோட்டையில் பார்ப்பனர் செய்யும் புரோகிதச் சடங்கை ஒழிப்பதென்றால் எளிதான செயலன்று. தோழர் அர்ச்சு-


னன் உயிரோடிருந்திருப்பாரேயாகில் மிக விரைவில் பழய கோட்டை சுயமரியாதைக் கோட்டையாகிவிடும் என்பது திண்ணம்.

அர்ச்சுனன் வேளாளர்க் குடும்பத்தைச் சேர்ந்தவர் கொங்குநாட்டிலுள்ள வேளாளர்பலர் தங்களைப் பார்ப்பனர்களுக்கும் மேம்பட்டவர்கள் என்று கருதிக்கொண்டு "ஆச்சார அனுஷ்டானங்களை"ப் பின்பற்றுகிறவர்கள். ஆனால் தோழர் அர்ச்சுனன் தான் ஓர் உயர்ந்த வைதீக அந்தஸ்து சாதியில் தோன்றியவர் என்ற எண்ணத்தை அறவேஒழித்தவர். எல்லோரும் திராவிடர்—ஓர் குலம் என்ற எண்ணத்தைப் பழய கோட்டையில் புகுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டவர்.

கொங்குநாட்டு வேளாளர் குடும்பத்தில் ஒப்பற்ற மாணிக்கமாய்த் தோன்றிய அவர் திராவிடர்கழகத்தில் பங்குகொண்டு சிறந்த தொண்டாற்றுவார் என்று எவரும் எண்ணியிருக்க முடியாது. கொங்குநாட்டிலுள்ள வேளாளர் குடியிற் றோன்றிய அத்தனை பணக்காரர்களும் பல காரணத்தால் பெரிதும் காங்கரஸ்காரர்களாவார்கள். அப்படியிருக்க தோழர் அர்ச்சுனன் திராவிடர் கழகத்தில் சேர்ந்து பணியாற்றுவார் என்பதை யார் எதிர்பார்க்க முடியும்? அர்ச்சுனன் திராவிடர் கழகத்தில் சேர்ந்துவிட்டார் என்பதற்காக அவரை அவர் சமுதாயத்தினர் வெறுத்தார்களில்லை. காரணம் அவர் மாற்றுக் கட்சியினரிடத்திலும், மற்றவர்களிடத்திலும் காட்டிய அன்புதான்.

எப்போழ்தும் புன்முறுவல் பூத்த முகத்துடன் விளங்கும் அர்ச்சுனன் எவரிடத்திலும் எக்காரணங் கருதியும் கடிந்து கொள்ள மாட்டார். அவர் கௌரவத்திற்காக ஆசைப்படுபவர் அல்ல. திராவிடர் கழகத்தில் சேர்ந்தது அவர் தன்னலத்தை எண்ணியோ அல்லது விளம்பரத்தை விரும்பியோ அல்ல என்பது யாவரும் அறிந்ததே.

# மறைந்த இளவல் என். அர்ச்சுனன்



திராவிடர் கழகத்தில் வந்து சேர்ந்த ஒவ்வொரு பணக்காரரும் பணியாளர்களும் பெரிதும் திராவிடர் கழகத்தில் தன்னை உயர்த்திக்கொள்வதே குறிக்கோளாகக் கொண்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்தார்கள் என்று சொல்லும்படி பலர் நடந்துகொண்டார்கள் என்றாலும் 15 ஆண்டுகளாக எத்தனை பேர் தன்னலங்கருதி நீதிக் கட்சியில் சேர்ந்து தங்களை உயர்த்திக்கொண்டு நீதிக்கட்சியையே அடியோடு மறந்துவிட்டனர் எதிர்க்கின்றனர் என்று சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டது என்றாலும் தோழர் அர்ச்சுனன் அவ்வகையான நோக்கமோ, பிறர் கருதும்படியாக ஏற்படுவதையோ மிகமிக இழிவு என்பதான கருத்துடையவராவார். தன்னை விளம்பரப்படுத்திக்கொள்வதில் சற்றும் விருப்பமில்லாதவர். கூட்டத்திற்குத் தலைமைதாங்கவேண்டுமென்று கேட்டால் தோழர் அர்ச்சுனன் தக்கார் ஒருவரைக் கொண்டு தலைமைதாங்கச் சொல்லுங்கள் என்றுகூறுவார். அதனால் அர்ச்சுனன் தகுதியுடையவரன்று என்பதல்ல. நல்ல தகுதியுடையவரேயாயினும் அதை விளம்பரப்படுத்திக் கொள்ள அவர் விரும்பவில்லையென்பதுதான் அதன் கருத்து. திராவிடர் கழகத்திற்குப் பல வகையாலும் உதவிபுரிந்து வந்தார். திராவிடத் தொண்டர்களுக்கு அவர் செய்த பொருளுதவி மிகப்பெரிது. அதைவிடப் பெரிது அவர் திராவிடர் கழகத்தை முன்னேற்றப் பாடுபட்டது.

பெரியார் ராமசாமி அவர்களின் [illegible] படியே [illegible] தவறாது நடந்தவர் என்னலாம். தோழர் அர்ச்சுனனின் குடும்பத்தார் யாவரும் ஆச்ச

னன் பெரியாரின் உண்மையான சிஷ்யர் என்றே கருதி வந்தனராம். அதற்குக் காரணம் பெரியாரிடத்தில் அர்ச்சுனன் வைத்திருந்த அன்புப் பணிவும்தான் என்று கூறலாம். "தலைவர் கருப்புச்சட்டைப் போடவேண்டுமென்று சொல்லிவிட்டதால் திராவிடர் கழகத்திலுள்ள ஒவ்வொருவரும் கருப்புச்சட்டையை எடபோழ்தும் போட்டுக்கொண்டிருக்க வேண்டு"மென்று அடிக்கடி கூறுவார். சென்னை சட்டசபை மந்திரி பக்தவச்சலம் அவர்கள் பழயகோட்டையைப் பார்வையிட வந்த ஞான்று தோழர் அர்ச்சுனன் கருப்புச் சட்டையணிந்து அதில் பெரியார் பேட்ஜை மாட்டிக்கொண்டு மந்திரியாரை வரவேற்ற காட்சி மந்திரியாரையே திகைக்க வைத்துவிட்டதாம்.

அவர் மறைவு எய்துவதற்கு 20நாட்களுக்கு முன்னால் பெரியாரைப் பார்த்து, தான் மதனபள்ளிப் போவதாகவும், மதனப்பள்ளியிலிருந்து ஒரு வாரத்தில் திரும்பிவிடுவதாகவும், திரும்பி வந்தவுடனே பெரியாருடன் தான் புதிதாக 16000ரூபாய்க்கு வாங்கிய உயர்தரமான காரில் கோவை மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்வதாகவும் அதற்குத் திட்டம் போடும் படியாகவும கூறினார். அது மாத்திரமன்றி "பெரியாரைமகிழ்வுறச் செய்வதே என் முதல் வேலை" என்று அடிக்கடி சொல்லுவார்.

பெரியார் அவர்கள் அர்ச்சுனன் மறைவுக்காக வருந்துவதைப்போல் இதுவரை யாருக்காகவும் வருந்தி இருக்க மாட்டார் என்று கூறலாம். "அர்ச்சுனனைக் கொண்டு நம் இயக்கம் எவ்வளவோ நலமடையுமென்று கருதியிருந்தேன், அது இயலாமற் போயிற்று, திராவிட மக்களுக்கு நல்வாய்ப்பு இல்லை" என்று சொல்லி சொல்லி வருந்துகிறார். அதனாலேயே தனது சுற்றுப் பிரயாணங்களையும் நிறுத்திவிட்டு துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்.

திராவிடர் கழகம் தனது உண்மையான பணியாளர்கள் பலரை இழந்து வருகிறது என்றாலும், பன்னீர்ச் செல்வம், சி டி. நாயகம் ஆகியவர்களைப் போலவே வேறு ஈடுசெய்ய முடியாத ஒப்பற்றவராகிய அர்ச்சுனனை இழந்தது திராவிட மக்களுக்கு நல்ல வாய்ப்பளிக்க இயற்கையே வஞ்சனை செய்கிறது, துரோகம் செய்கிறது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

அர்ச்சுனன் மறைவினால் எதற்கும் கலங்காத பெரியாரும், திராவிட மக்களும் கலங்கி கண்ணீர் விட்டார்கள் எனினும் இயற்கையை வரையறுப்பது முடியாத காரியமாதலால் மக்களையே நம்பி இல்லாமல் மானமும், மேன்மையும் சதா சர்வகாலம் நினைவுறுத்திக் கொண்டு இருக்கப்படும் திராவிடர் சமூதாயம் தன் மானத்தையும் தன் இரத்த சுத்தத்தையும் சிறிதுநேரமாவது நினைவுறுத்திப் பார்க்குமானால் ஒவ்வொருவரும் செல்வம், நாயகம், அர்ச்சுனன் போல் தானேயாகி விளங்கி மனிதத் தன்மை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. திராவிட இளைஞர்கள், செல்வர்கள் அர்ச்சுனன் மறைவால் உணர்ச்சிபெற்று அர்ச்சுனன் இடத்தைப் பூர்த்திசெய்வார்களாக.

அர்ச்சுனன் மறைவு குறித்து திராவிட நாட்டில் இம்மாதம் (27-10-46, 27-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அர்ச்சுனன் நாளாகக்கொண்டு ஆங்காங்கு கூட்டம் கூட்டி அனுதாபம் காட்ட வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

# காங்கரஸ் காலிகள் அட்டகாசம்

அகிம்சா மூர்த்தியின் ஆசி பெற்ற அன்பர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்ந்தனர். அவர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்ந்த அந்நாள் தொட்டு இந்நாள்வரையில் திராவிடநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பெருத்த கலவரங்கள் நடந்தவண்ணமிருக்கின்றன.

9-10-46ல் சேலத்தில் காந்தியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. சேலத்தில் காந்தியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டதென்று கூறுவதைவிட காங்கரஸ்காரர்கள் காலித்தனம் செய்யும் விழா கொண்டாடப்பட்டதென்று சொல்வதே பொருத்தமுடையதென்னலாம்.

காங்கரஸ்காரர்கள் சேலத்தில் காந்தியார் பிறந்தநாள் விழாவன்று செய்த காலித்தனத்திற்கு எல்லையே இல்லையாம். விழாவையொட்டிப் புறப்பட்ட ஊர்வலத்தில் காங்கரஸ் காலிகள் கடப்பாறைகளில் பலவகை நிறத் தாள்களைச் சுற்றி, அவற்றைக் காண்பார்க்குப் பலவகை நிறத் தாள்கள் சுற்றிய கழிகள்போல் காட்சியளிக்கும் வண்ணம் செய்து, அவைகளில் மூவர்ணக் கொடிகளை மாட்டிப் பிடித்துக் கொண்டு வந்தனராம். அப்படி கொண்டுவரப்பட்ட கடப்பாறைகளைக் கொண்டுதான் திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர்களின் வீட்டுத்திண்ணைகளை இடித்தனராம். வீடுகளில் வேயப்பட்டிருந்த ஓடுகளையும் நொறுக்கினர்களாம். அதுமாத்திரமன்றி திராவிடர் கழகக்கொடிகளைத் தீக்கிரையாக்கினராம். திராவிடப் பெண்கள் மனம் புண்படும்படியாக

இழிச் சொற்களால் திட்டினராம்.

அகிம்சை மூர்த்தியின் பிறந்த நாளை அகிம்சை மூர்த்தியின் அன்பிற்குரியவர்கள் இவ்வண்ணம் கொண்டாடுவதுதான் அகிம்சைத் தத்துவத்தின் உச்சநிலையா?

அன்று மேற்கொண்டும் முஸ்லிம் மக்களுடன் போர் கொடுப்பதென்று முடிவு செய்து குகை முஸ்லிம் மக்களின் மசூதிப் பக்கம் ஊர்வலத்தைச் செலுத்திச் சென்றனர். முஸ்லிம் மக்கள் மசூதிக்குப் பக்கத்தில் எவ்வகையான ஊர்வலமும் செல்லக்கூடாதென்ற சட்டத்தைப் புறக்கணித்துச் சென்ற காங்கரஸ்காரர்களின் ஊர்வலத்தைப் போலீசார் தடுத்தனராம். அதையொட்டிப் போலீசாருக்கும் காங்கரஸ்காரர்களுக்கும் பெரும் போர் நடந்ததாம். அதனால் மூவர் உயிரிழந்தனர். பலர் படுகாயப்பட்டனர். பலர் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளனர். காங்கரஸ்காரர்கள் வம்பை விலைக்கு வாங்கியதால்தான் இப் பெருங் கலவரம் சேலத்தில் நடைபெற்றது. அதனால் விளைந்த தொல்லைகள் யாவற்றிற்கும் காங்கரஸ்காரர்களே பொறுப்பாளிகள்.

'நம்மவர்கள் ஆள்கின்றார்கள்;' எதைச்செய்தாலும் நம்மவர்கள் நம்மைத் தண்டிக்கமாட்டார்கள்' என்ற எண்ணத்துடன் காங்கரஸ்காரர்கள் எந்த அக்கிரமங்களை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற முடிவிற்கு வந்துள்ளனர்.

காங்கரஸ்காரர்கள் ஏதாவதொரு சாக்கைக் கற்பித்துக்கொண்டு வாய்ப்புக் கிடைக்குங் காலெல்லாம் ஏனைய கட்சியினரைத் தாக்குவதே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். மதுரையில் கருப்புச் சட்டைப் படையினர் மாநாட்டில் பெருங்குழப்பம்! பின்னர் ஜவகர் காஷ்மீரத்தில் கைதுசெய்யப்பட்ட ஞான்று அம்மதுரையிலேயே மீண்டுமோர் குழப்பம்! அக்குழப்பங்களால் சிலர் உயிரிழந்தனர். பலர் படுகாயப்பட்டனர். நூற்றுக்கணக்கில் சிறைக்கோட்டம் நண்ணினர். வாணியம்பாடி, பாப்பாரப்பட்டி, தூத்துக்குடி, நீடாமங்கலம் முதலிய விடங்களிலும் குழப்பங்கள். இரண்டு திங்கள்களுக்கு முன்னால் சேலத்தில் திராவிடர் கழக ஊர்வலத்தில் கலவரம். அதனால் ஒருவர் கண்ணிழந்தார்.

இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? தேசியப் பத்திரிகைகள் கூறுவதுபோல் வகுப்புப்பிரச்சினையா? அல்லது காங்கரஸ்காரர்கள் திட்டம் வகுத்துக்கொண்டு வேண்டுமென்றே இவ்வண்ணம் செய்கின்றனர் என்பதா? அல்லது மேலிடத்து இரகசிய உத்திரவா?

நாள்தோறும் காங்கரஸ் காலிகள் திராவிடர்களுக் களிக்கும் தொல்லைகளைக் குறித்து கணக்கற்ற செய்திகள் கைவரப் பெறுகின்றோம். இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன?

காங்கரஸ்காரர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்ந்தபின்னர் தானே இவ்வகையானக் காலித்தனங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் தாண்டவமாடுகின்றன?

அப்படிக் காலித்தனம் செய்கின்றவர்களைத் தக்கமுறையில் தண்டிக்க ஏன் காங்கரஸ் மந்திரிகள் ஏற்பாடு செய்யவில்லை? காங்கரஸ்காரர்கள் இரகசியமாகத் திட்டம்போட்டு ஏனைய கட்சிகள் நாட்டிலே உலவா வண்ணம் செய்யும்படி காங்கரஸ் காலிகளைத் தூண்டிவிட்டிருப்பதாகத் தானே நினைக்கவேண்டியுள்ளது.

காலிகளைக் கண்டுபிடிப்பதற்காகப் பகிரங்க விசாரணையை நடத்துகின்றவர்கள் யாவர்? எவ்வினத்தைச் சார்ந்தவர்? பார்ப்பனரோ அல்லது பார்ப்பனப் பாதந்தாங்கிகளோ தானே விசாரணையை நடத்துகின்றார்கள்? இவர்கள்கூறும் தீர்ப்பு எம்முறையிலிருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? மதுரைக் கலவரத்துக்கு விசாரணைத் தீர்ப்பு எங்கே?

கல்கத்தாவில் நடந்த குழப்பத்திற்குக்கல்கத்தா ஆட்சி மன்றத்திலிருக்கும் முஸ்லிம் லீகைச் சார்ந்தவர்கள் காரணம் என்று காங்கரஸ்காரர்கள் கூறுகின்றனரே. அப்படியாயின் சென்னை மாகாணத்தில் நடைபெறும் காலித்தனங்களுக்குக் காரணம் காங்கரஸ் மந்திரிசபையார்தான் என்று ஏன் கூறக்கூடாது? அதுதானே உண்மையாக இருக்கமுடியும்! கல்கத்தா காலித்தனத்தை அடக்கியாள கல்கத்தா மந்திரிசபைக்கு தகுதி இல்லை என்றால் சென்னை மாகாண காலித்தனத்தை அடக்க சென்னை மாகாண மந்திரிசபைக்குத் தகுதி இல்லை என்றுதானே பொருள்? இம்மாதிரி காலித்தனங்களுக்கு இடம் கொடுத்துக்கொண்டே போவார்களானால் வரும் காலத்தில் திராவிடநாட்டு நிலைமை மிக மோசமானதாய்விடும் என்று எச்சரிக்கை செய்கின்றோம். அதுமாத்திரமின்றி மந்திரிசபை நிலைப்பதும் ஐயத்திற்குரியதுதான் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுவதோடு காந்தியாரும், நேரு பண்டிதரும் தங்கள் வீட்டிற்கு இராணுவக்காவல் போட்டுக்கொண்டு இன்று வாழ்வதுபோல் சென்னை மந்திரிகள் நிலையும் ஏற்பட்டுவிடும் என்று "ஜோசியம்" கூறுகிறோம்.

## (3-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரிகளாக வந்தால் வயதுவந்த எல்லா மக்களுக்கும் ஓட்டுரிமை அளிப்போம். கட்டாயக்கல்வியை கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டு வருவோம்; சொத்துக்களில் லாபத்தில் யாவருக்கும் சமஉரிமை அளிப்போம்.

இந்தியாவிலுள்ள நாற்பதுகோடி மக்களுக்கும் காங்கரஸ் பிரதிநிதியா? இது சுத்தப் பொய். மூன்றில் ஒரு பாகமாக இருக்கும் 563 சுதேச சமஸ்தானங்களில் இவர்களுக்கு வேலையில்லை. காஷ்மீரத்து ராஜா பச்சையாக சொல்லிவிட்டார் வெளியே போ என்று. நேரு மீறினார். உடனே சிறைசெய்தார். ஓடி வந்துவிட்டார். இதைப்போலவே திருவாங்கூர் திவான் சி. பி. ராமசாமி ஐயர் காந்தியாரை உள்ளே நுழையக்கூடாது என்று சொல்லிவிட்டார். ராஜ்கோட் ராஜா விரட்டிவிட்டார். இப்படியாக ஒன்பது கோடி சுதேச சமஸ்தான மக்களும், 563 அரசர்களும் தனித்தனியே இருக்கிறார்கள். 9-கோடி முஸ்லிம்கள், 6-கோடி தாழ்த்தப்பட்டோர் 4-கோடி திராவிடர்கள், 70-லட்சம் சீக்கியர்கள், கிறிஸ்தவர் முதலிய மற்றும் ஏனைய தளப்பட்ட கட்சியார்கள் 3-கோடிக்குமேலுள்ளார்கள். இது நிற்க, கம்யூனிஸ்ட் கட்சி, இந்து மகாசபை, வருணாஸ்ரம சுயராஜ்ய சங்கம், ராய் கட்சி, மிதவாதக்கட்சி இன்னும் எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. இவைகள் போக ஏறக்குறைய இரண்டு கோடி மக்களுக்கு வேண்டுமானால் காங்கரஸ் தன்னைப் பிரதிநிதியென்று சொல்லிக்கொள்ளலாம். அதிலும் 50லட்சம்கூட நூற்பதில்லை, கதர் கட்டுவதில்லை. ஆனால் பத்திரிகை பூராவும் அவர்கள் கையிலிருப்பதால் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுக்குத் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்கள். காசு கொடுத்து ஆட்களை விலைக்கு வாங்கி காலித்தனத்தனம் செய்வதற்கும், கை தூக்குவதற்கும் தயார்செய்து வைத்துள்ளார்கள். யானை தனது தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொள்வது போல, இவர்களுக்கு கூப்பாடு போடுவதற்கு நம்முடைய ஆட்களா? வடபாதி மங்கலம் வாண்டையார் நாடிமுத்து இவர்கள் நிலை என்ன? கம்யூனிஸ்களுக்குப் பயந்து காங்கரஸில் சரணாகதி அடைந்திருக்கிறார்கள்.

காங்கரஸ் தோழர்களே, கம்யூனிஸ்ட் தோழர்களே! எங்களை ஏன் குறைசொல்லுகின்றீர்கள். பிறவியிலே, மதத்திலே, கடவுளிலே இருக்கின்ற முதலாளித்வத்தை ஒழிக்க நாங்கள் பாடுபடுகின்றோம் தனி ஒருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம், என்று கம்யூனிஸ்ட் தோழர்கள் சொல்லுகின்றார்கள். உற்பத்தியைக் கொடுக்கின்ற உலகத்தை ஏன் அழிக்கவேண்டும்? "இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகு இயற்றியான்" என்று எங்கள் பொதுவுடமைத் தலைவர் வள்ளுவர் பொன்னெழுத்துக்களால் பொறித்திருக்கின்றாரே. உணவில்லாத ஒருவனையும் படைத்து, உற்பத்தியைத் தருகின்ற உலகத்தையும் படைத்த அந்தக் கடவுளையல்லவோ அவர் ஒழிக்கச் சொல்லுகின்றார். கடவுள் வேண்டுமானால் நல்ல கடவுளாக இருக்கட்டுமே. எனதருமை வாலிபத் தோழர்களே! எங்கள் கொள்கைகளை உணருங்கள். இனி ஒரு கலகம்கூட வரக்கூடாது. வேண்டுமானால் பார்ப்பனர்களுக்குத் துணிவிருந்தால் எங்களை உதைக்கட்டும். கம்யூனிஸ்ட் திராவிடத் தோழர்களே நீங்கள் ஒதுங்கி நில்லுங்கள். ஆதிதிராவிடர்கள், முஸ்லிம்கள் போராட்டம் ஆரம்பிக்கப் போகின்றார்கள். அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் உதவி புரியுங்கள். பூணூலும் உச்சிக் குடுமியும் போய்விடுமென்று பார்ப்பான் பயப்படுவான். பிறகு சண்டையே இருக்காது. உண்மையான நாட்டுப் பற்று சுயமரியாதைப் பற்றுடன் நான சொல்லுகின்றேன். சூத்திரப்பட்டம் ஒழிய வேண்டுமென்றால் கருப்புச் சட்டையை அணியுங்கள் கருப்புச் சட்டையின் மூலம்தான் நமது இழிவை ஒழிக்க முடியும். உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். சிந்தியுங்கள், கம்யூனிஸ்ட் தோழர்களே எங்களை நம்புங்கள்.

பிறகு பெரியார் அவர்கள் கீழ்க்கண்டவாறு கேள்விகளுக்குப் பதிலுரைத்தார்.

கேள்வி:—வடநாட்டு ஜின்னாவை ஏன் ஆதரிக்கின்றீர்கள்?

பதில்:—அவருக்கு நாடு பிரிந்தால் நமக்கும் நாடு பிரியும். அவருடைய வழியைப் பின்பற்றுங்கள் என்று தான் சொல்லுகின்றேன். அவர் நமக்குத் தலைவரல்ல என்றாலும் ஆதரவாளர். அவரை மகாத்மாவாக்க நாங்கள் சொல்லவில்லை. அவர் உண்மை வீரர்.

கேள்வி:—மதத்தை ஒழிக்கவேண்டும் என்று தாங்கள் சொல்லும் போது முஸ்லிம் மதத்துக்கு ஏன் ஆதரவு கொடுக்கவேண்டும்?

பதில்:— ஜாதிபேதம் உள்ள மதம், மக்களை இழிவு படுத்தும் மதம், மூட நம்பிக்கை மதம் ஒழிய வேண்டும். இத்தகைய கொடுமைகள் இல்லாத மதம் ஒழியவேண்டும் என்று திராவிடர் கழகம் சொல்லவில்லை.

## அடுத்த வாரம்

திராவிட மாணவர் கழகத்தின் சட்டதிட்டங்களும், குறிக்கோளும், அர்ச்சுனன் மறைவிற்கு அனுதாபம் காட்டுமுகத்தான் கூட்டப்பட்ட கூட்டங்களைப் பற்றியும், பண்டித ஜவகருக்கு எல்லைப்புற மாகாணத்தில் நடந்த மரியாதையைப் பற்றியும் அடுத்த இதழில் வெளிவரும்.

## "வைத்தியக் களஞ்சியம்"

திருநெல்வேலி தோழர் பாலகவி பிரமநாயகம் அவர்களுக்கு மதுரை சித்த வைத்திய சங்கத்தினர் "வைத்தியக் களஞ்சியம் என்ற பட்டம் அளித்துள்ளனர்.


## விற்பனைக்கு

"பார்ப்பனப் படுமோச விளக்கம்" என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப் பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.